தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-3-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடைக்கு பின் மிளகாய் வற்றலை உடனடியாக விற்கவும்

உலகளவில் மிளகாய் வற்றல் உற்பத்தி, நுகர்வு மற்றும் ஏற்றுமதியில் இந்தியா முதன்மை நாடாக விளங்குகிறது. 2013-14ஆம் ஆண்டில் மிளகாய் 7.75 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 14.92 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்தாண்டை (2012-13) விட சாகுபடி பரப்பில் 2.39 (7.94 இலட்சம் எக்டர்) சதவீதம் குறைந்தும் உற்பத்தியில் 14.42 (13.04 இலட்சம் டன்கள்) சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தியாவிலிருந்து மிளகாய் வற்றல் அமெரிக்கா, ஐக்கிய அரபு நாடுகள், மலேசியா, இலங்கை, பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் ஆந்திரபிரதேசம், மத்தியப்பிரதேசம், தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் நீள மிளகாய் வகை அதிகளவில் பயிரிடப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில், சம்பா வகை (நீள மிளகாய்) தூத்துக்குடி மற்றும் விருதுநகரின் சில பகுதிகளிலும், முண்டு வகை இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அதிகளவில் பயிரிடப்படுகிறது. முண்டு வகை மிளகாய் வற்றல் மிதமான காரத்தன்மை கொண்டது மற்றும் காஞ்சிபுரம், சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட நுகர்வோர்களால் அதிக அளவு விரும்புகிற வகையாக உள்ளது.

தமிழ்நாட்டில் முண்டு வகை மிளகாய் வற்றல் மானாவாரி பயிராக ஆகஸ்டு – செப்டம்பர் மாதங்களில் பயிரிடப்பட்டு ஜனவரி மற்றும் மார்ச் மாத இறுதியில் அறுவடைக்கு வரும். இது வருடத்திற்கு ஒரே பயிராக பயிரிடப்படுகிறது. எனவே வியாபாரிகள் மிளகாய் அறுவடையின் போது, அதிக அளவில் கொள்முதல் செய்து இருப்பு வைப்பதன் மூலம் ஆண்டு முழுவதற்கான, தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

தற்போது முண்டு வகை மிளகாய் வற்றல் இராமநாதபுரம் சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 100 முதல் 110 வரையிலும் பரமக்குடி மற்றும் விருதுநகர் சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 90 முதல் 100 வரை விற்கப்படுகிறது. சம்பா வகை மிளகாய் வற்றல் விளாத்திகுளம் சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 70 முதல் 75 வரையிலும் விற்கப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகமானது, கடந்த 5 ஆண்டுகளாக இராமநாதபுரம் சந்தையில் நிலவிய முண்டு வகை மிளகாய் வற்றல் விலை மற்றும் விளாத்திகுளம் சந்தையில் நிலவிய சம்பா வகை மிளகாய் வற்றல் விலையை ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில், முண்டு வகை மிளகாய் வற்றல் இராமநாதபுரம் சந்தையில் மார்ச் 2015 மாதத்திற்கு பிறகு குறைய தொடங்கும் மற்றும் இதன் விலை கிலோவிற்கு ரூபாய் 95 முதல் 100 வரையிலும் மற்றும் விளாத்திகுளம் சந்தையில் சம்பா வகை மிளகாய் வற்றல் விலை கிலோவிற்கு ரூபாய் 55 முதல் 60 வரையிலும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏப்ரல் மாதம் முதல் விலை குறைய தொடங்கும். எனவே விவசாயிகள் அறுவடை செய்த மிளகாய் வற்றலை உடனடியாக விற்க பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-2431405

<u>மேலும் தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி- 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்